# வந்தவாசி நகரமன்றக் கூட்டம்
# சாதாரணக் கூட்ட அறிவிப்பு

31.08.2020–ம் தேதி திங்கட்கிழமை மாலை 2.00 மணிக்கு நடைபெற்ற வந்தவாசி நகரமன்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.

முன்னிலை : ச.பார்த்தசாரதி,பி,ஏ.,
தனி அலுவலர் மற்றும் நகராட்சி ஆணையாளர், வந்தவாசி நகராட்சி.

## பொருட்கள்

குறள் :

கற்க கசடற கற்பவை கற்றப்பின்
நிற்க அதற்கு தக.

110. மோட்டார்வாகனம் – கோவிட் 19 – மாவட்ட ஆட்சியர் திருவண்ணாமலை அவர்களின் செயல்முறை ஆணை எண்.சி4/9104/2020, நாள்.15.06.2020ன்படி வந்தவாசி நகர பகுதியில் கோவிட்–19 பயன்பாட்டிற்கு முககவசம் அணியாத பொதுமக்கள், வியாபாரிகள், பொது இடங்களில் மாஸ்க் அதாவது முககவசம் அணியாதவரும் நபர்களிடம் அபராதம் வசூலிக்க மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் மூன்று துறையின் மூலம் வசூலிக்க உத்திரவு வழங்கியதன் பேரில் வருவாய்துறை மற்றும் காவல்துறை, நகராட்சி துறை ஆகிய மூன்று துறைகள் மூலம் வசூலிக்க உத்திரவு வழங்கியதின் பேரில், முககவசம் மூலம் வசூலிக்க தொகையை டீசல், டிபன் , சாப்பாடு , டீ போன்ற செலவினங்கள் மற்றும் வாகனம் TN25ZX1915 என்ற வாகனம் பயன்படுத்தியமைக்கும் செலவினங்கள் மேற்கொள்ளவும், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் செயல்முற ஆணைக்கிணங்க மேக்ஸிகேப் வாகனம் 17.06.2020 முதல் 31.07.2020 வரை 45 நாட்களுக்கு பயன்படுத்தியமைக்கும் வாகனம் வாடகை ஒரு நாளைக்கு ரூ.1350/– வீதம் 45 நாட்களுக்கு ரூ.60,750/– மட்டும் வாகனம் உரிமையாளர் திரு.K.திருஞானசம்மந்தம்,அவர்கள் வாடகை கோரியதற்கு இணங்க தொகை வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

1. மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண். 539/2020/இ1,) (அனுமதிக்கப்பட்டது)

111. வந்தவாசி நகராட்சியில் மொத்தம் 24 வார்டுகள் உள்ளன, 24 வார்டுகளிலும் தெருவிளக்கு பராமரிப்பு செய்ய போதிய ஆட்கள் இல்லாததால் தெருவிளக்குகளை உடனுக்குடன் பழுதுகள் பார்க்கவும், மின்கம்பங்களில் மின்விளக்குகளை பொருத்தவும், ஒப்பந்த அடிப்படையில் 30.06.2020 முடிய ஒப்பந்தம் விடப்பட்டது. ஒப்பந்த காலம் முடிவடைவதால், மேலும் கொரோனா நோய் அதிகமாக பரவி உள்ளதாலும் ஒப்பந்தம் விடாத சூழ்நிலையில் ஏற்கனவே ஒப்பந்தம் எடுத்த ஒப்பந்ததாரருக்கு ஒருமாதம் (ஜீலைமாதம்) காலம் பணி செய்தமைக்கு ரூ.65000/– மட்டும் வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| 1. 40 வாட்ஸ் குழல் விளக்குகள் | – 868 |
| 2.CFL விளக்குகள் | – 104 |
| 3.உயர்மின் விளக்குகள் | – 4 |
| 4.சோடியம் ஆவி விளக்குகள் | – 398 |
| | 1374 |

**அலுவலகக் குறிப்பு:**

1. மன்றம் அனுமதி அளித்தல்.
2. அவரசம் அவசியம் கருதி தெருவிளக்கு பணி அவசியம் என்பதால் போதிய பணியாளர் இல்லாததால் ஒப்பந்த அடிப்படையில் பணி செய்யவும், ஜீலை மாதம் செலவினம் ரூ.65000/– மட்டும் மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

(ந.க.எண். 540/2020/இ1,) (அனுமதிக்கப்பட்டது)

**112.** ஒப்பந்தப்புள்ளி வந்தவாசி நகராட்சி–தமிழ்நாடு நகர்ப்புற சாலை மேம்பாட்டு திட்டம் 2020–2021ன் கீழ் வந்தவாசி நகராட்சி பகுதி வார்டு 19, புதிய பேருந்து நிலையம் அணுகு சாலைக்கு, தார்சாலை மற்றும் மழைநீர்வடிவால் வாய் அமைத்தல் பணிக்கு ரூ.100.00 (இலட்சம்) மதிப்பீட்டில் மேற்கொள்ள 18.08.2020 ஒப்பந்தப்புள்ளி தினசரி நாளிதழில் விளம்பரம் செய்ய சென்னை தலைமை செயலகத்தில் உள்ள மக்கள் தொடர்பு அலுவலரின் மூலமாக விளம்பரம் செய்ய அனுப்பப்பட்டது. அதில் இரண்டு தினசரி நாளிதழில் தமிழ் மற்றும் ஆங்கிலம் என இரு நாளிதழ்களில் விளம்பரம் செய்தமைக்கு விளம்பர கட்டணம் ரூ.61,538/– மட்டும் விளம்பரம் செய்த நிறுவனத்திற்கு பில் தொகை வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

1. மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண். 860/2020/இ1,) (அனுமதிக்கப்பட்டது)

**113.** வரிவிளம்பரம் 2019–2020ம் ஆண்டிற்கு வந்தவாசி நகராட்சிக்கு செலுத்த வேண்டிய சொத்துவரி, குடிநீர்வரி, தொழில்வரி, தொழில்வரி உரிமம் கட்டணம் போன்ற வரியினங்கள் மற்றும் திட்டபணிகள் ஐந்து ஆண்டு சாதனைகள் போன்ற விளம்பரங்கள் பொது மக்கள் அறியும் வண்ணம் தினசரி நாளிதழில் விளம்பரம் செய்த நாளிதழ் மாலை தமிழகம் என்ற நாளிதழ்களுக்கு விளம்பர கட்டணம் ரூ.14,700/–மட்டும் அந்நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

1. மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண். 1378/2020/எச்1,) (அனுமதிக்கப்பட்டது)

**114.** மின்விளக்கு –வந்தவாசி நகராட்சி எல்லைக்குட்பட்ட 12வது வார்டு, பஜார் வீதி (தேரடி பகுதியில் உள்ள கோபுர மின் விளக்கு பழுதடைந்துள்ளதாக பொதுமக்களிடம் புகார் வந்த வண்ணம் உள்ளதாலும், மேலும் பொதுமக்கள் அதிகமாக நடமாடும் பகுதி என்பதால் அவசரம் அவசியம் கருதி மின்விளக்கு சரி செய்ய உள்ளதால் அதை உள்ளூர் கடையில் வாங்கி கொள்ளவும், அதை வாங்கி பொருத்தி மின்விளக்கு எரிய வைத்தமைக்கும் உதிரி பாகங்கள் வாங்கிய நிறுவனமான ராசி எலக்ட்ரிக்கல்ஸ் வந்தவாசி என்ற நிறுவனத்திற்கு பில் தொகை ரூ.22,045/– மட்டும் அவசரம் அவசியம் கருதி இத்தொகையை SECTION 15ல் வழங்க ஆணையரின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

1. மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
2. அவசரம் அவசியம் கருதி மின்விளக்கு உதிரிபாகங்கள் வாங்கியமைக்கு ராசி எலக்ட்ரிக்கல்ஸ் என்ற நிறுவனத்திற்கு ரூ.22,045/– மட்டும் வழங்கியமைக்கும் மன்றம் ஒப்புதலுக்கு.

(ந.க.எண். 1385/2020/இ1,) (அனுமதிக்கப்பட்டது)

**115.**வந்தவாசி நகராட்சியில் பொது சுகாதார பிரிவில் பயன்படுத்திவரும் டிப்பர்லாரி TN25Z **6509** தகுதி சான்று காலம் **12.07.2020** உடன் முடிவடைந்து விட்டதால் பொது சுகாதாரம் அவசியம் கருதியும், நிர்வாக நலன் கருதியும், உடன் FC செய்து கொள்ள தகுதி சான்று பெற அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனமாக செந்தில் முருகன், ஆட்டோ ஒர்க்கஸ் –ல் அனைத்து பணிகளும் மேற்கொள்ளவும், அதற்கான தோராய செலவினம் ரூ.**2.00** (இரண்டு இலட்சத்துக்கு) மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

1. மன்றம் பதிவு செய்தல்.
   பொது சுகாதாரம் நலன் கருதியும், நிர்வாக நலன் கருதியும், டிப்பர் லாரி TN25Z6509 –ஐ தகுதி சான்று பெற (FC) அனைத்து பணிகள் மேற்கொள்ள ஆகும் தோராய செலவினம் ரூ.**2.00** (இரண்டு இலட்சத்திற்கு) மன்றத்தின் அனுமதி அளித்தல்.

**(ந.க.எண். 1203/2020/எச்1,)** **(அனுமதிக்கப்பட்டது)**

**116.** வந்தவாசி நகராட்சியில் பொது சுகாதாரத்திற்கு பயன்படுத்தி வரும் வாகனம் TN25AW3043 வாகனத்தின் தகுதி சான்று காலம் **22.07.2020** உடன் முடிவடைவதால் அதனை புதுப்பிக்கவும், வாகனத்தில் அனைத்துப் பணிகளும் மேற்கொள்ளவும், அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தில் வாகனத்தில் மேற்கொள்ளவேண்டிய பணிகள் மேற்கொள்ள தோராய செலவினத்திற்கு ரூ.**2.00** (இரண்டு) இலட்சத்திற்கு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

1. மன்றம் பதிவு செய்யலாம்.
   பொது சுகாதாரம் அவசியம் கருதி அவசரம் அவசியம் முன்னிட்டு தகுதி சான்று பெற அனைத்து பணிகளும் மேற்கொள்ள ஆகும் தோராய செலவினம் ரூ.**2.00** (இரண்டு இலட்சம்) மன்றத்தின் அனுமதி அளித்தல்.

**(ந.க.எண். 126/2020/எச்1,)** **(அனுமதிக்கப்பட்டது)**

**117.** வந்தவாசி நகராட்சியில் (Providing BT Surface & Construction of Storm Water Drain in Ward No.19. (New Bus stand Approach Road) at Vandavasi Municipality)பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் **18.08.2020** தேதியன்று வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விவரம் |
|---|---|---|
| 1. | Thiru.S.Baskar | மதிப்பீட்டைவிட **4.82**% Above |
| 2. | Thiru.SriVenkateswara Contractor | மதிப்பீட்டைவிட **9.50**% Above |

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

1. மன்றம் முடிவு செய்யலாம்.
2. வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட **4.82** குறைவாக வரப்பெற்றுள்ள திரு.எஸ்.பாஸ்கர், ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

**(ந.க.எண். 860/2020/இ1,)** **(அனுமதிக்கப்பட்டது)**

**118.** கோவிட் 19 தடுப்பு நடவடிக்கை மற்றும் நிவாரணம் தொடர்பாக வந்தவாசி நகராட்சிப் பகுதியில் இயங்கி வரும் அம்மா உணவகம் மூலம் மூன்றுவேலை உணவு தயாரித்து வழங்கப்பட்டு வருகிறது. அம்மா உணவகத்தில் எலிகள் மற்றும் பாம்புகள் உள்ளே நுழைந்து உணவுப் பொருட்களை சேதப்படுத்தி வருவதால், கோவிட் 19 தடுப்பு நடவடிக்கை பாதிக்காமல் இருக்க அம்மா உணவகம் புதுப்பிக்கப்பட்டு வருகிறது. உணவுப்பொருட்களை பாதுகாப்பாக வைக்க சரியான இடம் இல்லாததால், புதிய பேருந்து நிலையத்தில் காலியாக உள்ள கடை எண்.18 மற்றும் 19—ஐ பயன்படுத்திக்கொள்ள ஆணையாளரால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. பாதுகாப்பு காரணமாக Safety Grill அமைக்கவும், அவசர பணி என்பதால் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15—ன் கீழ் பணிகள் மேற்கொள்ளவும் மன்றத்தின் முன்அனுமதிக்கும், பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது. (உத்தேச செலவினம் ரூ.65,000/—)

<u>அலுவலகக் குறிப்பு:</u>

1. மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண். 986/2020/இ1,) (அனுமதிக்கப்பட்டது)

**119.** வந்தவாசி நகராட்சி பொதுசுகாதார பிரிவிற்கு தேவையான புகை அடிக்கும் இயந்திரங்கள் 07.08.2020ல் விலைப்புள்ளி கோரியதில் 12.08.2020—ல் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் கீழ்காணும் விவரத்தில் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகின்றது.

| நிறுவனத்தின் பெயர் | விவரம் | | | |
|---|---|---|---|---|
| விக்னேஸ்வரி இண்டஸ்ரியல், புரோடக்ட்,H.110L பொன்னம்பலம் சாலை, கே.கே.நகர், சென்னை | Super Fog Mini Deluxe Vehicle Mounted type Thermo Fogging Machine – SFMD Rs.2,78,000- | Super Fog Portable Type Self stoat Thermo Fogging Machine Rs.SFP Rs.74,500- | Super Fog gas handy machine SFHF Rs.24,000- | Gas Cylinder Rs.330- |
| சிஸ்டம்ஸ் இன்சினியரிங்,நெ.1, அன்னை சத்யா நகர் மெயின்ரோடு, செந்தமிழ்நகர், ராமாபுரம் சென்னை—89 | Rs.2,67,000- | Rs.72,600- | Rs.22,420- | Rs.312- |
| S.N. எண்டர்பிரைசஸ், நெ.6, 1 G, ராஜாஜி அவின்யூ, வளசரவாக்கம், சென்னை—87. | Rs.2,76,000- | Rs.73,500- | Rs.22,800- | Rs.322- |

<u>அலுவலகக் குறிப்பு:</u>

1. மன்றம் முடிவு செய்யலாம்.
2. நகராட்சியில் உள்ள 24 வார்டுளிலும், வளர்ந்த கொசுவை ஒழிக்க வீட்டின் உட்புறம் மற்றும் வெளிப்புறம் புகை அடிக்க அவசர அவசியம் கருதி நகரமன்ற அனுமதி எதிர்நோக்கி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று குறைவான தொகை விலைப்புள்ளி வரப்பெற்றுள்ள சிஸ்டம்ஸ் , இன்சினியரிங், அன்னை சத்யா நகர் மெயின் ரோடு, செந்தமிழ்நகர், ராமாபுரம் சென்னை—89 நிறுவனத்தின் விலைப்புள்ளி ஏற்கப்பட்டு பணி உத்திரவு வழங்கி மெஷின்கள் சப்ளை பெறவும், தொகை வழங்கவும், நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
3. மேலும் தோராய செலவு ரூ.5,00,000—கும் மன்ற அனுமதி வைக்கப்படுகின்றது.

(ந.க.எண். 1375/2020/எச்1,) (அனுமதிக்கப்பட்டது)

120. வந்தவாசி நகராட்சி – அம்மா இரு சக்கர வாகன திட்டம் 2019 – 2020ஆம் ஆண்டிற்கான நடவடிக்கை குறித்தும் மேலாண்மை இயக்குநர் –TNCDW சென்னை அவர்களின் செயல்முறை கடித எண் 25/2020/TNSRLM-ATWS நாள்–13.01.2020 மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர், திருவண்ணாமலை அவர்களின் செயல்முறை கடித ந.க.எண் அ9/1128/2019 நாள் 20.03.2020 ன் படியாக மகளிருக்கான அம்மா இரு சக்கர வாகனத்திட்டம் 2019–2020 ஆண்டிற்கான பணிபுரியும் மகளிர் எளிதில் பணிக்கு சென்று வர இரு சக்கர வாகனம் வாங்குவதற்கு 50% மான்யம் அல்லது ரூ. 25,0000/– மான்யம் வழங்கும் திட்டம் செயல்படுத்திட சுமாா் 45 பயனாளிகள் என நிர்ணயிக்கப்பட்டு அதற்கான தொகையும் இவ்வலுவலகத்தின் நிர்வாகத்திற்கு தொகை விடுவிக்கப்பட்டுள்ளது, எனவே, இத் தொகையினை முறையே உரிய தகுதியுடைய பயனாளிக்கு வழங்கிடவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. இப்பணியினை அவசர அவசியம் கருதி அரசு வழிகாட்டுதலின்படி பணி மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் 189/2018/ எச்1) (அனுமதிக்கப்பட்டது)

121. வந்தவாசி நகராட்சியில் வார்டு–1 முதல் 24 மற்றும் அரசு கட்டிடங்கள், மருத்துவமனைகள் , அம்மா உணவகம் ஆகிய இடங்களில் கோவிட் 19 தடுப்பு நடவடிக்கை எடுக்கும்பொருட்டு அவசர அவசியம் கருதி சுண்ணாம்புநீர் தெளிக்க வேண்டி உள்ளதால் அரசின் அனுமதி பெற்ற ஒப்பந்ததாரர் ராஜேஸ்வரி எல் நாதன் கெமிக்கல்ஸ் மற்றும் டிரேடர்ஸ் என்பவருக்கு 20 MT சுண்ணாம்பு நீர் சப்ளை செய்திடவும், ஒரு கிலோவிற்கு ரூ.18 வீதம் மொத்தம் ரூ.3,60,000/– (ரூபாய் மூன்று இலட்சத்து அறுபதாயிரம் மட்டும்) மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகின்றது.

Letter No.74/Js/MA Finance (Salaries) 2020 dt:01.04.2020ன்படி Sec 16 (a) of T.N.Transperency in Tender Act 1998 and the Provision of See 9 and 10 of the Said Act be exempted for such emergent procurement for the Said purpose (C) Disinfectants'

ஆக உள்ள சுண்ணாம்பு நீர் அவசர அவசியம் கருதி கோவிட் 19 முன்னெச்சரிக்கை தடுப்பு நடவடிக்கைக்காவும், 1:4 என்கிற அடிப்படையில் கலந்து தெளிக்க வேண்டி உள்ளதாலும், வாங்கியமைக்கு உண்டான தொகை ரூ.3,60,000/– வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

1. மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
2. பிரிவு 15–ல் தொகை வழங்கலாம்.

(ந.க.எண் 1274/2018/ எச்1) (அனுமதிக்கப்பட்டது)

**122.**வந்தவாசி நகராட்சியில் வார்டு **1** முதல் **24** வரை உள்ள தெருக்களில் கோவிட் **19** நோய் தோற்று உள்ள வீடுகளில் மற்றும் பொதுமக்கள் அதிகம் வந்து போகும் இடங்களில் கிருமிநாசினி லைசால் **2.5%** தெளிக்க வேண்டி அரசின் அனுமதி பெற்ற ஒப்பந்ததாரர் ராஜேஸ்வரி எல் நாதன் கெமிக்கல்ஸ் மற்றும் டிரேடர்ஸ் **115/90** ந **2**வது தளம், பெரம்பூர் நெடுஞ்சாலை, சென்னை–**11** என்பவருக்கு **1750** லிட்டர் சப்ளை செய்தமைக்கு ஒரு லிட்டர் ரூ.**240/–** வீதம் மொத்தம் ரூ.**4,20,000/–** (ரூபாய் நான்கு இலட்சத்து இருபதாயிரம் மட்டும்) மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகின்றது.

Letter No.74/Js/MA Finance (Salaries) 2020 dt:01.04.2020ன்படி Sec 16 (a) of T.N.Transperency in Tender Act 1998 and the Provision of See 9 and 10 of the Said Act be exempted for such emergent procurement for the Said purpose (C) Disinfectants'

ஆக உள்ள லைசால் **2.5**ரூ கிருமி நாசினியினை அவசர அவசியம் கருதி கோவிட் **19** முன்னெச்சரிக்கை தடுப்பு நடவடிக்கைகளாக தெளிக்க வேண்டி உள்ளதால் இதற்கு உண்டான தொகை ரூ.**4,20,000/–** வழங்க மன்றம் அனுமதிக்கு வைக்கப்படுகின்றது.

**அலுவலகக் குறிப்பு:**

1. மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
2. பிரிவு **15**–ல் தொகை வழங்கலாம்.

(ந.க.எண் 1274/2018/ எச்1) **(அனுமதிக்கப்பட்டது)**

**123.** வந்தவாசி நகராட்சி எல்லைக்குட்பட்ட (Providing Safety Grills to the Shop No.19 and 20 Available at New Bus Stand Complete Ward No.19 of Vandavasi Municipality ஆகிய பணிகளை செய்து கொடுக்கும் பணிக்கு – பணி உத்திரவு வழங்குதல் தொடர்பாக.

திருவாளர்கள்

| | | |
|---|---|---|
| 1. | A.Ajees | 0.04% சதவீதம் மதிப்பைவிட குறைவு |
| 2. | N.Thirunavukkarasu | 0.01% சதவீதம் மதிப்பைவிட குறைவு |
| 3. | P.Murugesan | .0.02 % சதவீதம் மதிப்பைவிட அதிகம |

மேற்கண்ட விலைப்புள்ளிகளில் ரூ.**0.04%** சதவீதம் மதிப்பைவிட குறைவான விலைப்புள்ளிக்கொடுத்துள்ள A.Ajees அவர்களின் விலைப்புள்ளியினை மன்ற அனுமதியை ஏற்று பணி உத்திரவு வழங்கியதையும் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

1. மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண். 986/2020/இ1,) **(அனுமதிக்கப்பட்டது)**

**124.** வந்தவாசி நகராட்சி வார்டு **1** முதல் **24** வரை மற்றும் அரசு கட்டிடங்கள், மருத்துவமனைகள், அம்மா உணவகம் , காவல்நிலையம், பஜார்பகுதிகள், கழிவறைகள் ஆகியவற்றில் கோவிட் **19** கிருமி தொற்று பொதுமக்களுக்கு பரவாமல் தடுக்க அவசர அவசியம் கருதி பிளிச்சிங்பவுடர் **10** ஆகூ அளவில் அரசின் அனுமதி பெற்ற ஒப்பந்ததாரர் ராஜேஸ்வரி எல் நாதன் கெமிக்கல்ஸ் மற்றும் டிரேடர்ஸ் **115/90** ந **2**வது தளம், பெரம்பூர் நெடுஞ்சாலை, சென்னை–**11** என்பவருக்கு ஒரு கிலோவிற்கு ரூ.**58/–** வீதம் **10,000** கிலோ மொத்தம் ரூ.**5,80,000/–** (ரூபாய் ஐந்து இலட்சத்து எண்பதாயிரம் மட்டும்) மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகின்றது.

Letter No.74/Js/MA Finance (Salaries) 2020 dt:01.04.2020ன்படி Sec 16 (a) of T.N.Transperency in Tender Act 1998 and the Provision of See 9 and 10 of the Said Act be exempted for such emergent procurement for the Said purpose (C) Disinfectants'

ஆக உள்ள பிளிச்சிங்பவுடர் அவசர அவசியம் கருதி கோவிட் **19** முன்னெச்சரிக்கை தடுப்பு நடவடிக்கைகளாக **1:4** என்கிற அடிப்படையில் பிளிச்சிங்பவுடர் **1** ரூ கலந்து தெளிக்க வேண்டி உள்ளதால், வாங்கியமைக்கு உண்டான தொகை ரூ.**5,80,000/–** வழங்க மன்றம் அனுமதிக்கு வைக்கப்படுகின்றது.

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

1. மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
2. பிரிவு **15**–ல் தொகை வழங்கலாம்.

(ந.க.எண் **1276/2018/** எச்**1**) (அனுமதிக்கப்பட்டது)

**125.** வந்தவாசி நகராட்சி எல்லைக்குட்பட்ட (Supply and delivery of street light Materials at Tindivanam road in Vandavasi Municipality ஆகிய பணிகளை செய்து கொடுக்கும் பணிக்கு – பணி உத்திரவு வழங்குதல் தொடர்பாக.

| திருவாளர்கள் | |
|---|---|
| 1. A.Ajees | 0.78% சதவீதம் மதிப்பைவிட குறைவு |
| 2. N.Thirunavukkarasu | 3.87% சதவீதம் மதிப்பைவிட அதிகம் |
| 3. P.Murugesan | .1.54 % சதவீதம் மதிப்பைவிட அதிகம் |

மேற்கண்ட விலைப்புள்ளிகளில் ரூ.**0.78%** சதவீதம் மதிப்பைவிட குறைவான விலைப்புள்ளிக்கொடுத்துள்ள A.Ajees அவர்களின் விலைப்புள்ளியினை மன்ற அனுமதியை எதிர்நோக்கி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதியுடன் ஏற்று பணி உத்திரவு வழங்கியதையும் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண். **0112/2020/**இ**1**,) (அனுமதிக்கப்பட்டது)

**126.** வந்தவாசி நகராட்சிப்பகுதி வார்டு–கு, பிளாக்–6, நகரபுலஎண்.90/1, 91/1–ல், சுமார் 1.00 ஏக்கர் பரப்பளவில் குடியிருப்பு மனைப்பிரிவுகள், புதிய தெருக்கள் உருவாக்க அனுமதி கோரி மனைப்பிரிவு உரிமையாளர் திரு.N.மூர்த்தி அவர்கள் 12.04.2018–ல் மனு சமர்ப்பித்தார்கள். இம் மனு நகர் ஊர் அமைப்புத்துறை, துணை இயக்குநர், வேலூார் அவர்களுக்கு ந.க.எண்.559/2018/TPI நாள்.18.04.2018–ன் மூலம் பரிந்துரைக்கப்பட்டது. நகர்ஊர் அமைப்புத்துறை துணை இயக்குநர், வேலூார் அவர்கள், கடித ந.க.எண்.6150/2018/வே.ம.3, நாள்.19.08.2019–ல் மேற்படி மனைப்பிரிவுக்கு Road Pattern அனுமதி வழங்கியுள்ளார்கள். வந்தவாசி நகரமன்ற தீர்மானம் எண்.138, நாள்.18.11.2019–ன் மூலம் சாலைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு, ந.க.எண்.559/2018/TPI, நாள்.29.11.2019 கடிதம் மூலம் தொழில்நுட்ப அனுமதிக்கு பரிந்துரைக்கப்பட்டது. மேற்படி மனைப்பிரிவுக்கு நகர்ஊர் அமைப்புத்துறை, துணை இயக்குநர் வேலூார் அவர்கள் ந.க.எண்.6150/2018/வே.ம.3, நாள்.01.06.2020–ல் தொழில்நுட்ப அனுமதி வழங்கியுள்ளார். அனுமதி எண்.149/2020 இதனடிப்படையில் அரசாணைப்படி கட்டப்படவேண்டிய கூராய்வு கட்டணம் தலா ரூ.1000/– வீதம் 22 மனைகளுக்கு ரூ.22,000/– மற்றும் சாலையின் இரண்டு பக்கங்களில் வடிகால் வாய்க்கால்அமைக்கவும், மின்கம்பங்கள் அமைக்கவும், நகராட்சிப்பொறியாளரால் மதிப்பீட்டின்படி கட்டவேண்டிய தொகை ரூ.6,88,053/– சேர்த்து ரூ.7,10,053/–ஐ நகராட்சிக்கு செலுத்துமாறு அறிவிப்பு சார்வு செய்யப்பட்டது. மனைப்பிரிவு உரிமையாளர் ரூ.710053/–(ரூபாய் ஏழு இலட்சத்து பத்தாயிரத்து ஐம்பத்தி மூன்று மட்டும்) வந்தவாசி நகராட்சி கருவூலத்தில் தொகையாக செலுத்தியுள்ளார். இரசீது எண்.041/VSI/1/20–21/0001723, நாள்.20.08.2020 மற்றும் Land Conversion Charges ரூ.9000/–ஐ, கருவூல பற்றுச் சீட்டு மூலம் பாரத ஸ்டேட் வங்கி, வந்தவாசியில் செலுத்தி இரசீது சமர்ப்பித்துள்ளார். Challan No.11/ 28.07.2020

ஆகவே , நகர் ஊர் அமைப்புத்துறை, துணை இயக்குநர், வேலூார் அவர்களின் தொழில்நுட்ப அனுமதி எண்.149/2020–ல் வழங்கியுள்ள அறிவுரைகள், நிபந்தனைகள், வழிகாட்டுதல்களுக்குட்பட்டு செயல்பட மனைப்பிரிவு உரிமையாளர் அவர்களுக்கு அறிவுறுத்தி, மேற்படி மனைப்பிரிவில் உள்ள 22 (இருபத்தியிரண்டு) மனைகளுக்கும் மன்றம் அங்கீகாரம் அளிக்க பொருள் வைக்கப்படுகின்றது.

**அலுவலகக் குறிப்பு:**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 559/2018/TPI) (அனுமதிக்கப்பட்டது)

**127.** வந்தவாசி நகராட்சிக்குட்பட்ட பகுதி வார்டு எண்.23–ல், பொட்டிநாயுடு தெருவில் சிறுபாலம் அமைக்கும் பணிக்கு செலவினம் பொதுநிதியில் ரூ.75,000/–க்கு பணி மேற்கொள்ளவும், மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும், வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–**

மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண். 0019/2020/இ1) (அனுமதிக்கப்பட்டது)

**128.**வந்தவாசி நகராட்சிக்குட்பட்டவார்டு எண்.4ல் காஞ்சிபுரம் ரோடு, தேசிய நெடுஞ்சாலைத்துறை சாலையில் விரிவுபடுத்தயிருப்பதால், குடிநீர் பகிர்மான மற்றும் பிரதான குழாய் மாற்றி, புதிய குடிநீர் பைப்லைன் அமைக்கும் பணிக்கு ரூ.4,70,000/–க்கு பணிகள் மேற்கொள்ளவும், மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–**

மன்றம் அனுமதி அளித்தல்.

(ந.க.எண். 0019/2020/இ1) (அனுமதிக்கப்பட்டது)

129. வந்தவாசி நகராட்சி பொது சுகாதார பிரிவில் கோவிட் 19 தடுப்பு நடவடிக்கையாக வியாபார பெருமக்கள் மற்றும் பஜார் வந்து செல்லும் பொதுமக்கள் ஆகியோர் கைகழுவும் பழக்கம் ஏற்படுத்தி நோய் தோற்று பராவாமல் தடுக்க சின்டெக்ஸ் டேங் உடன் கூடிய ஸ்டீல் பேசின் பொருத்த 30.05.2020–ல் விலைப்புள்ளி கோரியதில் 05.06.2020–ல் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் , வைக்கப்படுகின்றது.

<u>விவரம்</u>

1. என்.திருநாவுக்கரசு, நெ.10, கனகராமசாமிபிள்ளைதெரு, வந்தவாசி.

| | |
|---|---|
| 500 லிட்டர் டேஸ்க் + பிட்டிஸ் | – 4550 .00 |
| S.S.ஸ்டீல் வாஸ்பேசின் பிட்டிஸ் | – 4050.00 |
| 4' உரை 3 No | – 2450.00 |
| மண் 1 / 2 யூனிட் | – 1750.00 |
| ஆட்கள் கூலி 3 பேர் | – 1260.00 |
| வண்டி வாடகை | – 350.00 |
| இரும்பு ஸ்டேன்ட 2x2 | – 2550.00 |
| சுண்ணாம்பு | – 1350.00 |
| ஸ்டிக்கர் | – 350.00 |
| | 18660.00 |

2. A. அஜீஸ், மக்தும் மரைக்காயர், தெரு., வந்தவாசி.

| | |
|---|---|
| 500 லிட்டர் டேஸ்க் + பிட்டிஸ் | –4500 .00 |
| S.S.ஸ்டீல் வாஸ்பேசின் பிட்டிஸ் | – 4000.00 |
| 4' உரை 3 No | – 2400.00 |
| மண் 1 / 2 யூனிட் | – 1700.00 |
| ஆட்கள் கூலி 3 பேர் | – 300.00 |
| இரும்பு ஸ்டேன்ட 2x2 | – 2500.00 |
| சுண்ணாம்பு | – 1300.00 |
| ஸ்டிக்கர் | – 300.00 |
| | 18200.00 |

3. E.மஜீத், மீரா காதர் ஷா தெரு, வந்தவாசி.

| | |
|---|---|
| 500 லிட்டர் டேஸ்க் + பிட்டிஸ் | – 4600 .00 |
| S.S.ஸ்டீல் வாஸ்பேசின் பிட்டிஸ் | – 4100.00 |
| 4' உரை 3 No | – 2600.00 |
| மண் 1 / 2 யூனிட் | – 1800.00 |
| ஆட்கள் கூலி 3 பேர் | – 1290.00 |
| வண்டி வாடகை | – 400.00 |
| இரும்பு ஸ்டேன்ட 2x2 | – 2600.00 |
| சுண்ணாம்பு | – 1500.00 |
| ஸ்டிக்கர் | – 400.00 |
| | 19290.00 |

அலுவலக குறிப்பு–

1. மன்றம் முடிவு செய்யலாம்.
2. கோவிட் 19 தடுப்பு நடவடிக்கைக்கு 4 இடங்களில் பஜார், வியாபாரிகள் மற்றும் பொதுமக்கள் கைகழுவும் பழக்கம் ஏற்படுத்தவும், குறைந்த விலைப்புள்ளி கொடுத்த ஆ.அஜீஸ், ஒப்பந்ததாரர் உடன் பொருத்தவும், தொகை வழுங்க நடவடிக்கை மேற்–கொள்ளவும், மன்றம் அங்கீகரிக்கலாம்.
3. மேலும் தோராய செலவு ரூ.80,000/–க்கு மன்ற அனுமதி வைக்கப்படுகின்றது.

(ந.க.எண். 0760/2020/எச்1) (அனுமதிக்கப்பட்டது)

130.கொரோனா நோய் தடுப்பு– வந்தவாசி நகராட்சி அலுவலகத்தில் பொதுமக்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் அதிகமாக நடமாட்டம் உள்ளதால், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் வேலூார் அவர்கள் நகராட்சி அலுவலகத்தில் Auto Matic Hand Sanitizer ஒன்று வாங்கி பொருத்தி கொள்ளுமாறு தங்கள் ஆய்வு கூட்டத்தில் தெரிவித்துள்ளதற்கிணங்க நகராட்சி அலுவலகத்தில் Sanitizer ஒன்று வாங்கி பொருத்தியமைக்கும் அதை BCT LABS அரக்கோணம் என்ற நிறுவனத்தில் ஒப்பந்ததாரர் திரு.N.திருநாவுக்கரசு என்பவர் வாங்கி வழங்கி உள்ளர், அதற்கான செலவினம் ரூ.20,060/– மட்டும் வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–**

1. மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண். 0760/2020/இ1) **(அனுமதிக்கப்பட்டது)**

131. பயிற்சி –பணியாளர்களுக்கு 2020–2021ஆம் ஆண்டிற்கு ஆண்டு சந்தாசெலுத்த கோயம்புத்தூர் பயிற்சி நிறுவனத்திலிருந்து வரப்பெற்ற கடித ந.க.எண்.276/2020/A2. 18.08.2020–ல் வரப்பெற்ற கடிதத்தில் தெரிவித்துள்ளதற்கிணங்க வந்தவாசி நகராட்சியின் சார்பாக ஆண்டு சந்தா ரூ.20,000/–மட்டும் செலுத்தவும் அதை TamilNadu Indititute of Urban Studies, Saibaba Colony, என்ற நிறுவனத்திற்கு வங்கி வரைவோலை அனுப்பிவைக்க மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–**

1. மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண். 1782/2020/இ1) **(அனுமதிக்கப்பட்டது)**

132. வந்தவாசி நகராட்சியில் 1 முதல் 24 வார்டுகளில் கோவிட் 19 தடுப்பு நடவடிக்கையாக கிருமி நாசினி தெளிக்கும் பணி அனைத்து வார்டுகளுக்கும் மேற்கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருவண்ணாமலை அவர்கள் 31.03.2020–ல் நேரடி ஆய்வின் போது தெரிவித்துள்ளதின் பேரில்10 எண்ணிக்கையிலான டிராக்டர் மூலம் அனைத்து வார்டுகளிலும் கிருமி நாசினி தெளிக்க சோடியம் ஹைப்போ குளோரைட் 5000 லிட்டர் சப்ளை வாங்கி கொள்ளவும் அதற்கான செலவினம் ரூ.1,53,500/– (ரூபாய் ஒரு இலட்சத்து ஐம்பத்தி மூன்றாயிரத்து ஐநூறு) மட்டும் அரசு அங்கீகாரம் பெற்ற கூட்டுறவு நிறுவனமான M/S. Sruthi Alum Industry, No.488, Balaji Nagar 3th Street Ambathur Chennai என்ற நிறுவனத்தில் வாங்கி கொள்ளவும் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

Letter No.74/Js/MA Finance (Salaries) 2020 dt:01.04.2020ன்படி Sec 16 (a) of T.N.Transperency in Tender Act 1998 and the Provision of See 9 and 10 of the Said Act be exempted for such emergent procurement for the Said purpose (C) Disinfectants'

ஆக உள்ள சோடியம் ஹைப்போ குளோரைட் 5000 லிட்டர் அவசர அவசியம் கருதி கோவிட் 19 முன்னெச்சரிக்கை தடுப்பு நடவடிக்கைகளாக கிருமி நாசினி தெளிக்க வேண்டி உள்ளதால், வாங்கியமைக்கு உண்டான தொகை ரூ.1,53,500/– வழங்க மன்றம் அனுமதிக்கு வைக்கப்படுகின்றது.

**அலுவலக குறிப்பு–**

1. மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
2. அவசரம் அவசியம் கருதி பணி மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 0706/2020/இ1) **(அனுமதிக்கப்பட்டது)**

**ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்**
**வந்தவாசி நகராட்சி.**